RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராசி அழகப்பன் கவிதைகளில் காதல் மொழி

கா. திருமூலம் [அ, *], மு. கவிதா [அ]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம், ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

# The language of love in Rasi Alagappan's poems

K. Thirumoolam [a, *], M. Kavitha [a]

[a] Department of Tamil, Erode Arts and Science College, Rangampalayam, Erode-638009, Tamil Nadu, India.

* Corresponding Author: thirumoolam6@gmail.com

Received: 25-07-2025
Revised: 05-09-2025
Accepted: 19-09-2025
Published: 30-09-2025

Check for updates

**ABSTRACT**

Poetry has a great place in the way people share their experiences. Poets who have recorded such experiences have spread from the Sangam period to the present day. Among them, Rasi Alagappan is the one who understands the hearts of the people in today's era and gives them the ideas they need through poetry. Rasi Alagappan is a notable poet in today's era. His works are a treasure trove of experiences. Such experiences make the readers happy, think and enjoy. In the twenty-first century, he has been giving many ideas that people do not notice and are not aware of through his poems. In it, he talks about ideas related to love, the joy that comes from the beginning of love when it is fulfilled, and the sorrow and problems that arise when it is not fulfilled. To highlight them, this is the study of the language of love in Rasi Alagappan's poems.

**Keywords:** Poems, Rasi Alagappan, people, Love

## முன்னுரை

இன்றைய காலத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஒரு கவிஞர் தான் ராசி அழகப்பன். இவரின் படைப்புகள் அனுபவங்களின் பெட்டகம். அப்படிப்பட்ட அனுபவங்கள் வாசகர்களை மகிழ்விக்கவும் சிந்திக்கவும் ரசிக்கவும் செய்யும் வண்ணம் உள்ளது. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மக்கள் கவனிக்காத மற்றும் விழிப்புணர்வு இல்லாத பல கருத்துக்களை தம் கவிதைகளின் வழி தந்துவருகிறார். அதில் காதல் சார்ந்த கருத்துகள், காதலின் துவக்கம் முதல் அது நிறைவேறும் போது ஏற்படும் இன்பமும், நிறைவேறாத போது ஏற்படும் துன்பமும் சிக்கல்களும் பற்றி கூறுகிறார். அவற்றை எடுத்துரைப்பதே ராசி அழகப்பன் கவிதைகளில் காதல் மொழி என்ற ஆய்வாகும்.

## சிறு வயது நினைவுகள்!

ஒன்றும் அறியாத வயதுகளில் பெற்றோர்கள் போல் நகையாடி விளையாடிய தருணங்களைப் பருவமடைந்த பிற்காலத்தில் நினைவூட்டி கூறுவதாக ஒரு கவிதை அமைந்துள்ளது.

“நீ சிற்றாடைக்குள்ளே சிரித்த வயது...”

“வேலைக்குப் போவதாய் நானும்...

விடையளிப்பதாய் நீயும்...” - ரா.அ.க. ப.42

என்றவாறு தலைவன் தலைவியடம் நினைவூட்டி பின் இன்று ஏன் தயக்கம் கொள்கிறாய் என்றும் வினாவுதாக அமைகிறது. சிறு வயதுகளில் அச்சமில்லா செயல்கள் பருவம் எய்திய பின் அச்சப்பட்டு சிந்திக்கும் நிலை வயதிற்கான பக்குவத்தை எடுத்துக்காட்டுகிறார் கவிஞர்.

## நகரம் / கிராமம் - காதல்

வாழும் சூழல்களும் பழக்கவழக்கங்களும் காதலர்களின் சந்திப்பும் உரையாடலும் எவ்வாறு நிகழும் என்பதை எதார்த்த மொழியில் பகிரந்துள்ளார். சந்தித்துக்கொள்ளும் இடம் நகர வாழ்வில் பேருந்திலும், கிராம வாழ்வில் மர நிழல்களில் என்றும் என பிரித்துக் கூறுகிறார்.

"கண் பேசாத போது அங்கே கடிதம் பேசும்...

இங்கே விழி இமைக்காத போது இதயம் பேசும்.." - ரா.அ.க. ப.38

நகர உரையாடல் கடிதத்திலும் கிராம உரையாடல் இதயத்திலும் என்று உரைப்பது, கிராமப்புற பழக்கவழக்கங்களின் வெளிப்பாட்டை உணர்த்துகின்றது.

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல" - குறள் 1100

என்றாவாரு காதலர்களின் வாய்ச் சொற்கள் அற்ற பேச்சை திருவள்ளுவரும் எடுத்தியம்பியுள்ளார்.

## காதலில் உள்ள சமூக சிக்கல்கள்

இன்றைய காலகட்டத்தில் சில சமூக மக்களிடையே காணப்படும் சாதி வேறுபாட்டுப்பார்வையால் பலியான நபர்கள் பல பேர் உள்ளனர். அவர்களுல் காதலர்களும் அடங்குவர். அப்படிப்பட்ட நிகழ்வுகள் காதலர்களின் சிந்தனையை எவ்வாறு மாற்றுகிறது மற்றும் அச்சப்பட வைக்கின்றது என்பதை காண முடியும்.

"மனசாட்சி போனபின் அரசாட்சி செய்தவனைத்

தந்தை என்றா அழைக்க முடியும்?" ப. 53

சாதியை இறைவனாகப் பார்க்கும் தந்தையை தந்தை என்று அழைப்பதே தவறு என்று கூறுவது அதன் தாக்கம் எவ்வாறு இருந்துள்ளது என்பது புரிதலாகிறது.

"ஆண்கள் இங்கு அறிந்த அடிமைகள்!

பெண்களோ அடிமைகளின் கிரீடங்கள்..." ப.35

பெற்றோர்களிடமும் சமூகத்திடமும் காதலர்கள் சாதி வேறுபாடுகளால் கட்டுண்டு கிடப்பதை எடுத்துக்கூறியுள்ளார். அதிலும் ஆண்களை விட பெண்களுக்கு சற்று அதிகமான அடக்குமுறை இருப்பதை உவமித்துள்ளார்.

இக்கருத்தை பாவேந்தரும் தனது கவிதையில்,

"தாழ்வில்லை உயர்வில்லை

சமமென்ற நிலைவந்தால்

வாழ்வெல்லை காண்போமடி-சகியே.."

பாரதிதாசன் கவிதைகள் - சமத்துவப்பாட்டு -109

என்று சாதிகளின் அழிவே காதலர்களின் மகிழ்வான வாழ்வுக்கு அடித்தளம் என்று பதிவுசெய்துள்ளார்.

### பெண்களுக்கான சிக்கல்

"பூவின்தாய் செடி தான் ஆனாலும் அது

ரேகைகளைப் பார்த்துவிட்டு

வண்டுகளை அனுமதிப்பதில்லை...." - ரா.அ.க. ப.34

பெண் பிள்ளைகளை அவர்களது பெற்றோர்கள் அவர்களது சமூக நபர்களுடன் தான் நண்பர்களாக உள்ளார்களா என்று கவனிக்கும் தன்மையை சங்க இலக்கிய உவமைபோல் சுட்டியுள்ளார்.

"அவசரச் செய்தி ஞானம் பின்னிய மனைவியை

உதறிய பின் புத்தனுக்குப்

போதி மரமா ஞானமளித்தது?" - ரா.அ.க. ப.61

சமூகத்தில் உள்ள பொய்க்காதலும் பெண்களுக்கு பெரும் மன உளைச்சலை தேடித்தரும் என்பதை புத்தனா அவன்? எனும் வகையில் வினாவாக எழுப்பியுள்ளார்.

"ஆமாம் தோழி கலி காலத்தில்

ராமர்கள் வேண்டாம்

துச்சாதனர்களாய் இல்லாமலிந்தாலே போதும்.." - ரா.அ.க. ப.21

திருமணம் ஆன பெண்களிலும் அவர்களுடை எதிர்பார்ப்பு மகிழ்வான வாழ்க்கை இல்லை, துன்பம் அற்ற வாழ்க்கையே. சமூகத்தின் சிக்கல்களில் பெண்கள் படும் இன்னல்களின் வெளிப்பாடாக இக்கவிதை அமைகிறது.

### முடிவுரை

காதல் என்பது சங்க காலம் முதல் இக்காலம் வரையிலும் ஒரு முக்கியத்துவம் பெற்றுவருகிறது. எனினும் அதில் சிக்கல்களும் இருந்த வண்ணம் உள்ளது. சங்க காலத்தில் பரத்தையர் ஒழுக்கம் என்றால் இன்று சாதி வேறுபாடும் பொய்க்காதல்களும் இருந்துள்ளது. அவ்வாறு காதலில் உள்ள மகிழ்வுகளையும் சிக்கல்களையும் ராசி அழகப்பன் சிறந்த முறையில் உவமித்து கவிதைகளில் வெளிக்காட்டியுள்ளார்.

## References

ராசி அழகப்பன், (2018) கவிதைகள் தேர்வும்-தொகுப்பும் ஆத்மார்தி, பரிதி பதிப்பகம்.

திருவள்ளுவர், (2018) திருக்குறள் தெளிவுரை, பார்வதி பதிப்பகம், சென்னை.

பாரதிதாசன் (2023) பாரதிதாசன் கவிதைகள், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License